சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **41 /2020**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.2** வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை – II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி **04.01.2024** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: வெற்றிவேலன் | கிராமம : |
| த/பெ: கந்தசாமி | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

<u>முதல் விசாரணை</u>

நான் திருச்சி அரசு மருத்துவமனையில் மருத்துவ பதிவேடு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததன் பேரில் நான் இன்று ஆஜராகி உள்ளேன். <u>அத்தாட்சி கடிதம் சா.சா.ஆ.1 ஸ்ரீதரன் என்பவரது சிகிச்சை வரலாற்று குறிப்பு உண்மை நகல் சா.சா.ஆ.2</u> அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாகவும் வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெறும் அனைத்து நோயாளிகளின் விவரமும் எங்கள் பதிவேடுகளில் பராமரிக்கப்படும் என்றால்சரிதான். ஸ்ரீதரன் என்பவர் திருச்சி அரசு மருத்துவமனையில் 08.10.2019 முதல் 26.10.2019 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்றால்சரிதான்.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

<u>2 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சா.சா.ஆ.2 அடிப்படையில் ஸதரன் என்னென்ன சிகிச்சைஅளிக்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சா.சா.ஆ.2 சம்பந்தமாக ஸ்ரீதரன் சிகிச்சை அளித்த மருத்துவர் மட்டுமே நேரடியாக சாட்சியம் அளிக்க முடியும் என்றால்சரிதான். விபத்துப்பதிவேட்டில் சாலை விபத்தில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி 2 ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை 1ம் எதிர் மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒம் / வெற்றிவேலன்

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.